

# குடும்ப ஒற்றுமைக்கான திறவுகோல்கள்

## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *ஆதியாகமம் 33:12-14; ரூத் 1:16-18; யோவான் 17:21-26; கலாத்தியர் 3:28; எபேசியர் 2:11-22; 5:21-6:9.*

**மனன வசனம்:** அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். யோவான் 17:21.

ஒரு குடும்பத்தில் குடும்பத்தார் ஒவ்வொருவரும் வெவ்வேறு காலகட்டத்தில் இருக்கலாம். அப்பா-அம்மாவை எடுத்துக்கொண்டால், குழந்தைகள் பிறந்தது பெரியதொரு மாற்றம். இனி வாழ்நாள் முழுவதும் குழந்தைகளின் தாக்கம் இருக்கும். குழந்தைகளின் பிறப்பு அந்தக் குழந்தைகளுக்கு ஒரு மாற்றம்தான். அவர்கள் வளர்ந்து, தங்களுடைய சொந்த குடும்பத்தை அமைக்கும்வரை, பல்வேறு மாற்றங்களைச் சந்திக்கிறார்கள்.

பெற்றோரோ, பிள்ளைகளோ அனைவருக்கும் ஒரே மாதிரியான ஒரு போராட்டம் உண்டு. அது நம்முடைய பாவத்தன்மை. பாவத்தன்மையால் குடும்ப ஒற்றுமை பாதிக்கப்படுகிறது. சிலுவையால் தேவனோடும் மனிதரோடும் ஒப்புரவு ஏற்பட்டிருக்கிறது. எபே 2:13-16; கொலோ 1:21-23. ஆனால் ஒவ்வொரு நாளும் தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு நபரும் கிறிஸ்துவின் கிருபையைப் பெற்றாக வேண்டும். அப்போதுதான் குடும்ப ஒற்றுமை நிலவமுடியும். இது நம்முடைய அனுதின அனுபவமாக இருக்கவேண்டும். கிறிஸ்துவின் கிருபையால் இது நடக்க முடியும்.

ஞாயிறு மே 12

# கிறிஸ்துவே மையம்

**கேள்வி: கிறிஸ்துவுக்குள் விசுவாசிகள்மத்தியில் இருக்கவேண்டிய கிறிஸ்தவ ஒற்றுமையைச் சுட்டிக்காட்டுவதற்கு பவுல் பயன்படுத்துகிற உதாரணம் என்ன? எபே 2:11-22; கலா 3:28.**

---

---

மனிதர்களைப் பிரிக்கிற பிரிவினைகளை கிறிஸ்துவின் சிலுவை உடைத்தெறிகிறது. யூதருடைய ஆலயத்தில், ஆண்களையும் பெண் களையும், யூதரையும் புறஜாதியையும் பிரிக்கிற சுவர்கள் இருந்தன. அவற்றை உடைத்து, மனிதரை இயேசு ஒற்றுமைப்படுத்தினார். இரண்டு சமுதாயங்களை ஒன்றாக்கி, சமாதானம் உண்டுபண்ணினார். எபே 2:15. இந்த நற்செய்திதான் திருமண வாழ்வில் தம்பதிகள் சமா தானமாக வாழலாம் என்பதற்கான நற்செய்தி. வெகுகாலமாக பிரிந்து கிடைக்கிற குடும்பங்கள் கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தால் ஒப்புரவாகலாம்.

கிறிஸ்துவில் ஒருமைப்பாடுபற்றி வேதாகம வசனங்களை மேற் கோள் காட்டுவது ஒரு விஷயம்; அதை உண்மையிலேயே வாழ்க்கை யில் அனுபவிப்பது மற்றொரு விஷயம்.

**கேள்வி: தேவன் வாக்குறுதி தந்திருக்கிற ஒற்றுமையை நாம் வாழ்க்கையில் அனுபவிப் பதற்கு என்ன நடைமுறை மாற்றத்தை கிறிஸ்து நம்மில் ஏற்படுத்துகிறார்? ரோமர் 6:4-7; 2 கொரி 5:17; எபே 4:24-32.**

---

---

ஒரு பெரிய வட்டத்தின் விளிம்பிலிருந்து, மையத்தைநோக்கி பல கோடுகள் செல்லுமானால், மையத்தை அந்தக் கோடுகள் நெருங்க நெருங்க, அவை ஒன்றோடொன்றும் நெருங்கிநெருங்கி வரும்.

இயேசு கிறிஸ்துவை நாம் நெருங்கிவரும்போது, நாமும் ஒருவ ரோடு ஒருவர் நெருங்கிவருவோம்.

அப்பா- மகன், கணவன்- மனைவி போன்ற உறவுகள் அனைத்தி லும் அவர்களுக்கிடையே கிறிஸ்து மத்தியஸ்தராக இருக்கிறார். அவருடைய வார்த்தைகளை அறிந்து, அவரைப் பின்பற்றுவதன் மூல மாகவே நம்மிடையே உறவும் வளர்கிறது.

---

உங்கள் குடும்பம், அல்லது உங்கள் சபைக் குடும்பம் எவ்வளவு தூரம் கிறிஸ்து எனும் மையத் திற்கு நெருக்கமாக இருக்கிறது? உங்கள் உறவுகள் இருக்கவேண்டியபிரகாரம் இருப்பதற்கு, நீங்கள் வேறு என்ன மாற்றங்கள் செய்ய வேண்டும்?

---

# அவரது அன்பால் ஒன்றாகுதல்

நீங்களும் ஒருவரிடத்தில் ஒருவர் வைக்கும் அன்பிலும் மற்றெல்லா மனுஷரிடத்தில் வைக்கும் அன்பிலும் கர்த்தர் உங்களைப் பெருகவும் நிலைத்தோங்கவும் செய்(வாராக). 1தெச 3:12.

**கேள்வி: இயேசுவும் பிதாவும் ஒன்றாக இருப்பதுபோல, தம்முடைய சீடர்களும் ஒன்றாக இருக்கவேண்டும் என்று இயேசு வேண்டிக்கொண்டார். யோவான் 17:22. ஒற்றுமை உண்டாவதற்கு, அன்பு என்ன செய்யுமென்று இயேசு சொல்கிறார்?**

________________________________________

________________________________________

________________________________________

தம்முடைய சீடர்களின் ஒற்றுமைதான் இயேசுவின் மனதில் இருந்தது. 'நீ என்னிடத்தில் அன்பாக இல்லாவிட்டாலும், நான் உன்னிடத்தில் அன்பாக இருப்பேன்' என்கிற சான்றாண்மை என்னும் தேவன்புதான் ஒற்றுமை உண்டாக்கமுடியும். 1யோவான் 4:8. 'இயேசுவின் சீடர்கள் இவர்கள்' என்று அடையாளம்காட்டுவது அந்த அன்புதான். யோவான் 13:35. மனிதனின் இயல்பான தன்மையில், இந்த அன்பு கிடையாது. ஆவியானவர்மூலமாக மனிதரில் இயேசு வாசம்பண்ணும்போது இந்த அன்பு கிடைக்கும். ரோமர் 5:5; 8:9 ,11.

'நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டும். என்று இயேசு சொன்னார். யோவான் 15:12. இதை எழுதின யோவான் ஒருகாலத்தில் அன்பில்லாமல், பெருமையும் பதவியாசையும் குறைகூறுதலும் முன்கோபமும் உடையவராக இருந்தார். மாற்கு 3:17; லூக்கா 9:54,55. தன்னிடம் குறைகள் இருந்தபோதிலும், இயேசு தன்னை நேசித்தார் என்பதை பின்னர் உணர்ந்துகொண்டார். அப்போது, அவர் எல்லோரிடமும் அன்புகாட்ட ஆரம்பித்தார். 'அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்' என்று எழுதினார். 1யோவான் 4:19. 'தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்பு கூர்ந்திருக்க, நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம்' என்றும் எழுதுகிறார். 1யோவான் 4:11.

1கொரிந்தியர் 13:4–8–ஐ வாசியுங்கள். இதில் அன்பு என்கிற வார்த்தை வருகிற இடங்களிலெல்லாம், உங்கள் பெயரைச் சொல்லி, அந்த வாக்கியங்களை வாசியுங்கள். அது உங்களுக்கு பொருத்தமாக இருக்குமா? அன்பின் இந்த தன்மைகள் அனைத்தும் உங்கள் வாழ்வில் இருக்கவேண்டுமென்று ஆண்டவரிடம் கேளுங்கள். இந்த கிறிஸ்தவ லட்சியத்தை அடைவதற்கு அவர் என்ன செய்வாரென்று நினைக்கிறீர்கள்?

________________________________________

________________________________________

## சுயநலம்: குடும்ப அழிப்பான்

**பெருமையையும் சுயநலத்தையும் நீக்கிவிட்டால், பிரச்சனைகள் எல்லாம் ஐந்து நிமிடத்தில் நீங்கிவிடும்.**

நம்முடைய தன்மையை பாவம் கெடுத்திருக்கிறது. கேடுகளிலெல்லாம் பெரிய கேடு சுயநலம் ஆகும். பிறக்கும்போதே சுயநலத்துடன் தான் பிறக்கிறோம். இந்த யதார்த்தத்தை குழந்தைகளிடம் நாம் பார்க்க முடியும். நாம் வளரவளர சுயநலமும் வளர்ந்துகொண்டே வருகிறது. 'நான், நான், நான்' என்று அது எப்போதும் கத்திக்கொண்டே இருக்கும். பெரியவர்களானபிற, அது தன் கோர முகத்தைக் காட்டும். நம் குடும்பங்களில் இதன் கோரமுகத்தை பார்க்கமுடிகிறது.

இந்த நிலைமையை மாற்றவே இயேசு வந்தார். எபேசியர் 4:24. இயேசுவின் பெலத்தால் இந்தக் கொடிய குணத்தை வெல்லலாம் என்று வேதாகமம் வாக்கு தருகிறது. சுயநலமில்லா வாழ்க்கைக்கு இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை முழுவதும் நல்ல உதாரணமாக இருக்கிறது. 1 யோவான் 2:6. நமக்காகமாத்திரம் வாழ்கிற வாழ்க்கையைவிட்டு நாம் விலகமுடியும். சுயநலத்தை வெல்ல முடியும்.

**கேள்வி: பின்வரும் வசனங்களைப் பாருங்கள். சுயநலமற்ற வாழ்க்கைபற்றி அவை என்ன சொல்கின்றன?**

**பிலி 2:3-5** ____________________________

____________________________

____________________________

**1யோவான் 3:16-18.** ____________________________

____________________________

____________________________

பெருமையையும் சுயநலத்தையும் நீக்கிவிட்டால், அநேக பிரச்சினைகள் வெகு வேகமாக தீர்வுக்கு வந்துவிடும். இல்லையென்றால், அவை கொந்தளித்துக் கொண்டேயிருக்கும். குடும்பத்தார் அனைவரிடமிருந்தும் இந்த பாவங்கள் நீங்க வேண்டும். முக்கியமாக பெற்றோரிடம் சுயநலமாகிய பாவம் இருக்கவே கூடாது. சுயநலமின்மைக்கு உதாரணமாக இருக்கின்றது சிலுவைகாட்சி. பெருமையும் சுயநலமும் வரும்போது, சிலுவைகாட்சியை நினைத்துப் பார்த்தால், நமக்கு விடுதலை கிடைக்கும். அதற்காக ஜெபம், விசுவாசம், கண்ணீர், பணிவு போன்றவை அவசியப்படும்.

உங்கள் வாழ்க்கையில் தென்படுகிற சுயநலத்தை எதிர்த்து சிலுவையண்டை எவ்வளவு நேரம் செலவிடுகிறீர்கள்? போதுமான நேரம் செலவிடுகிறீர்களா என்பதைப்பற்றி மத்தேயு 7:16 சொல்வது என்ன?

# கீழ்ப்படிதல்

**கேள்வி: உறவுகள் நன்றாக இருப்பதற்கு, நாம் ஒருவருக்கொருவர் என்ன செய்ய வேண்டும் என்று பவுல் கூறுகிறார்? எபேசியர் 5:21. சபை ஒற்றுமைக்கும் குடும்பத்திலும் இந்தத் தன்மை ஏன் அவசியமாக இருக்கிறது? எபேசியர் 5:22; 6:9.**

எபேசியர் 5 21 இல் வருகின்ற கீழ்ப்படி எனும் சொல்லானது, ‘‘நீயே தீர்மானித்து, இன்னொருவர் சொல்கேட்பதற்கு உன்னை நீயே தாழ்மையாக ஒப்படை’’ என்று அர்த்தமாகும். தனித்தன்மை வாய்ந்த இந்த இயல்பை இயேசுவிடம் காணலாம். மத் 20:26-28; யோவான் 13:4,5; பிலி 2:5-8. தேவ ஆவியால் நிரப்பப்படுகிறவர்களிடமும் இந்தத் தன்மை காணப்படும். எபேசியர் 5:18,21. இவ்வாறு ஒப்படைப்பதற்கு தெய்வபயமே காரணம். ஒருவருக்கொருவர் தன்னையே தத்தம்செய்வது என்பது சமுதாய உறவுகளில் புரட்சிகரமான கருத்து ஆகும். எந்த விதிவிலக்கும் இல்லாமல், அனைவரும் கிறிஸ்துவுக்குள் ஒன்று என்கிற யதார்த்தத்தை இந்தக் கருத்து உண்மை ஆக்குகிறது.

இந்தக் கீழ்ப்படிதல் நம் வீடுகளில் கடைப்பிடிக்கவேண்டிய நியதி ஆகும். இதைக் குடும்பத்தில் கடைப்பிடித்து அதன் பலனைக் கண்டால், சபைக்குள்ளும் நிச்சயமாக அது மாற்றத்தை உண்டாக்கும். கீழ்ப்படிதல் எனும் நியதியைச் சொல்லிவிட்டு, அதை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது குறித்து பவுல் பேசுகிறார்.

மூன்று விதமான உறவுகளை குறித்து, எபேசியர் 5:22-6:9இல் பவுல் பேசுகிறார். இவை எல்லா இடங்களிலும் காணப்படுகிற உறவுகள். ஆனால், இந்த உறவுகளில் சமநிலை இல்லை. சமநிலை இல்லாத தன்மை தொடரவேண்டும் என்பதற்காக பவுல் இதைச் சொல்லவில்லை; கிறிஸ்தவ விசுவாசம் எப்படிச் செயல்படும் என்பதைக் காட்டவே இதைச் சொல்கிறார். விசுவாசிகள் ஒருவருக்கொருவர் தாங்களாகப் பணிவுகாட்ட வேண்டும் என்கிறார். எபே 5:22 இல், கணவன்-மனைவி உறவு. எபே 6:1 இல், பிள்ளைகள்-பெற்றோர் உறவு. எபே 6:5இல், வேலைக்காரர் எஜமான் உறவு. இந்த எல்லா உறவுகளிலும், பலவீனமானவர்களுக்கே முதலில் ஆலோசனைசொல்கிறார்.

**கேள்வி: மூன்று ஆலோசனைகளிலும் வருகிற ஒரு வார்த்தை எது?**

| எபே 5:22 | எபே 6:1 | எபே 6:5 |
|---|---|---|
| | | |

சமுதாயத்தில் இந்த மூன்று உறவுகளிலும் பலமுள்ளவர்களாக கருதப்பட்ட கணவன், பெற்றோர், எஜமான் ஆகிய மூவருக்கும் இரண்டாவதாக ஆலோசனை சொல்கிறார். அக்காலத்துச் சமுதாயம் ஏற்றுக் கொள்ளத் தயக்கம்காட்டக்கூடிய ஆலோசனைகளைச் சொல்கிறார். அக்கால விசுவாசிகளுக்கு இது ஆச்சரியமாக இருந்திருக்கும்.

எல்லாவகை உறவுகளும் சிலுவையில் சமநிலை அடைகின்றன. உண்மையான ஒருமைப்பாடு உண்டாவதற்கான வாய்ப்பு திறந்திருக்கிறது. எவ்வாறு?

# சொன்னபடி அன்புகாட்டுதல்

குடும்ப உறுப்பினர்கள் தாங்கள் சொன்னபடி அன்புகாட்டினால் தான் குடும்பம் ஒற்றுமையாக இருக்கமுடியும். கணவன்-மனைவி ஒருவரை ஒருவர் கவனித்துக் கொள்வதாக வாக்குகொடுக்கிறார்கள். தங்கள் வாக்கை மீறி, அர்ப்பணிப்பு இல்லாமல் வாழ்ந்ததால், வேதனைப்பட்ட குடும்பங்களை வேத வரலாற்றில் பார்க்கிறோம். சாமானிய மனிதர்கள் தங்கள் குடும்பங்களுக்கும் நண்பர்களுக்கும் தங்கள் வாக்குறுதிகளை தேவ ஒத்தாசையோடு காப்பாற்றியதைப் பற்றியும் வேதாகமத்தில் பார்க்கிறோம்.

**கேள்வி: பின்வரும் குடும்பங்களில் அவர்களது அர்ப்பணிப்பு நிலைகளைப் பாருங்கள். சில குடும்பங்களில் அர்ப்பணிப்பு இன்னும் எவ்வாறு பலப்பட்டிருக்கலாம்? சில குடும்பங்களில் காட்டப்பட்ட நல்ல அர்ப்பணிப்புக்கு காரணம் என்ன?**

**பெற்றோர்-குழந்தை அர்ப்பணிப்பு (ஆதி 33:12-14; யாத் 2:1-10)**

**உடன்பிறப்பு அர்ப்பணிப்பு (ஆதி. 37:17-28)**

**குடும்பத்தின் அர்ப்பணிப்பு (ரூத் 1:16-18; 2:11,12,20; 3:9-13; 4:10,13)**

**திருமண அர்ப்பணிப்பு (ஓசியா 1:2,3,6,8; 3:1-3)**

திருமணம்செய்தல், பிள்ளை பெற்றுக்கொள்ளுதல், பிள்ளை தத்தெடுத்தல் போன்றவற்றில் நம்மை இன்னொருவருக்கு அர்ப்பணிக்கிறோம். நம் வாழ்வின் ஒரு பகுதியை அவர்களுக்குக் கொடுக்கத் தீர்மானிக்கிறோம். இதுவரை செய்ததுபோல, இனிமேல் செய்யமுடியாது. தவறான நடத்தைகளைச் சட்டங்கள் கண்டிக்கலாம். ஆனால், இந்த உறவுகள் வளரவேண்டுமானால், அன்புமாத்திரமே அதைச் செய்யமுடியும்.

எபிரெயர் 13:5 இல் இயேசு கொடுத்திருக்கிற அர்ப்பணிப்பு உங்களுக்கு எத்தகைய அர்த்தமுள்ளதாக இருக்கிறது? இதேபோன்ற அர்ப்பணிப்பை நீங்கள் தேவனுக்கும், உங்கள் குடும்பத்தாருக்கும், சபை விசுவாசிகளுக்கும் கொடுத்தால், விளைவு எப்படி இருக்கும்?

## மேலும் படிக்க:

**குடும்ப ஒற்றுமையின் விளைவுகள்:** கிறிஸ்தவர்களின் முதல் வேலை அவர்கள் வீட்டிற்குள் ஒற்றுமையாக இருப்பது ஆகும். வீட்டிலே குடும்பமாக நெருக்கமான உறவு இருந்தால், அந்தத் தகப்பனும் தாயும் மகனும் மகளும் வீட்டிற்கு வெளியே நல்ல தாக்கங்களை உண்டாக்கமுடியும்.

**ஒற்றுமையின் ரகசியம்:** குடும்பங்களிலும் சபைகளிலும் மக்கள் பிரிந்து சண்டையிடுவதற்குக் காரணம் அவர்கள் கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்திருப்பதே ஆகும். நல்ல சாணக்கியமும், நிர்வாகத் திறனும், சிரமங்களை வெற்றிகொள்ள சிறந்த முயற்சியும் இருந்தால், சபையிலும் வீட்டிலும் ஒற்றுமை நிலவும் என்று சொல்லமுடியாது. இவையெல்லாம் அவசியப்பட்டாலும், கிறிஸ்துவோடு ஐக்கியம் இல்லாவிட்டால் இவற்றால் பயன் இல்லை.

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *உங்கள் சமுதாயத்தில் குடும்ப ஒற்றுமைக்கு எதிராக வேலைசெய்கிற சக்திகள் யாவை? இந்த சக்திகளின் செல்வாக்கினால் அவதிப்பட்டுகொண்டிருக்கிற குடும்பங்களுக்கு என்ன நடைமுறை ஆலோசனைகளை நீங்கள் சொல்வீர்கள்?*

2. *இப்போது உங்களுடைய சபையில் ஏதாவது ஒரு குடும்பம் பிரிந்த நிலையில் காணப்படுகிறதா? பிரிந்துநிற்கிற ஒவ்வொருவருக்கும் உங்கள் வகுப்பு உறுப்பினர்கள் எவ்வாறு உதவிசெய்யலாம்?*

3. *கீழ்ப்படிதலைப்பற்றிப் பாடத்தில் படித்த அனைத்தையும் விவாதியுங்கள். கிறிஸ்தவத்தின் அடிப்படையில் அதை நாம் எவ்வாறு புரிந்துகொள்ள வேண்டும்? கீழ்ப்படிதல் எனும் கருத்தை நாம் எவ்வாறு தவறாகப் பயன்படுத்துகிறோம்?*

4. *குடும்பத்தில் ஒற்றுமை நிலவுவதற்காகப் பயன்படுத்துகிற இந்த நியதிகளை எல்லாம் சபையில் ஒற்றுமைக்கும் பயன்படுத்தலாம்?*

# ஓய்வுநாள் பற்றிச் சொன்ன ‘மனிதன்’

**ஆண்ட்ரூ மெக்செஸ்னீ**

தூதர்களிடம் பேசின அனுபவம் எத்தனை பேருக்குக் கிடைத்திருக்கும்? நாட்லி டிட்வெல் என்கிற விவசாயிக்கு அந்த அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அவரிடம் கேட்டால், முன்பின் தெரியாத அந்த நபரை ‘அந்த மனிதன்’ என்று கூறுவார்.

1880ம் வருடம், ஒரு சாயங்காலப் பொழுதில், பாரம்பரிய நடன நிகழ்ச்சி ஒன்றில் பங்குபெற்று, ஜெபித்தவாறே வீட்டிற்குத் திரும்பிக்கொண்டிருந்தார் டிட்வெல். ஞாயிறு ஆசரிப்பு குடும்பத்தில் பிறந்தவர்; “ஓய்வுநாளை பரிசுத்தமாக ஆசரிக்க நினைப்பாயாக” என்கிற கற்பனையை வாசித்த பிறகு அவருக்கு குழப்பமாக இருந்தது. யாத் 20:8.

அவர் ஜெபித்தவேளையில் ஒரு மனிதர் அருகில் தோன்றினார். அந்தப் பகுதியில் உள்ள அனைவருமே டிட்வெல்லுக்குத் தெரியும். அதனால்தான் அந்தப் புதிய நபரைப் பார்த்ததுமே டிட்வெல்லுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆனால் அந்த நபர் இனிய சுபாவ முள்ளவராகத் தெரிந்தார்.

“அங்கு தோன்றிய அந்த மனிதர், அவரோடு பேச ஆரம்பித்திருக்கிறார்” என்று சொன்னார் அவருடைய பேத்தியான 94 வயது லோரெனா ஸ்டிகால்டெ.

ஓய்வுநாள் பற்றிப் பேச ஆரம்பித்தார்கள். தேவன் சனிக்கிழமையை ஓய்வுநாளாக ஏற்படுத்தியிருக்க, யாருமே அதை ஆசரிக்கவில்லையே என்று தன் ஆதங்கத்தை வெளிப் படுத்தியிருக்கிறார் டிட்வெல்.

ஆனால் சனிக்கிழமையில் ஆராதிக்கிற சிலரை தனக்குத் தெரியுமென அந்தப் புதியவர் சொன்னார். பிறகு அவர்கள் கூடுகிற இடம் பற்றிச் சொன்னார். எனவே அந்தப் பக்கமாக டிட்வெல் திரும்பிப் பார்த்துவிட்டு, மீண்டும் திரும்பியபோது அந்த மனிதரைக் காணவில்லை. “திரும்பிப்பார்த்தபோது, அந்தப் புதிய மனிதரைக் காணவில்லையாம்” என்று சொன்னார் அவருடைய பேத்தியான 68 வயது ரெபா ஸெய்ஃபெர்ட்.

நடந்ததை தன் மனைவியிடம் கூறினார் டிட்வெல். பண்ணைவீடு ஒன்றில் ஒரு சில அட்வென்டிஸ்டுகள் கூடி ஆராதிப்பதைக் கண்டுபிடித்தார்கள். டிட்வெல்லும், அவருடைய மனைவியும், எட்டு பிள்ளைகளும் அட்வென்டிஸ்ட் சபையில் ஞானஸ்நானம் பெற்றார்கள். டெக்ஸாஸில் உள்ள அந்தப் பகுதியில் முதன்முதலாக அட்வென்டிஸ்ட் சபையை நிறுவிய வர் டிட்வெல்தான். இன்று அந்தச் சபை இல்லை. ஆனால் அந்தப் பகுதியிலிருந்து ஏராள மான அட்வென்டிஸ்டுகள் உருவாகியிருக்கிறார்கள். அவர் விட்டுச் சென்ற அட்வென்டிஸ்ட் பாரம்பரியம் தலைமுறை தலைமுறையாகத் தொடர்கிறது.



**“ஒரு பெரிய அட்வென்டிஸ்ட் குடும்பத்தில் அவர்தான் முதல் அட்வென்டிஸ்ட் விசுவாசி” என்கிறார் அவருடையை கொள்ளுப்பேத்தி.**